

அமரர்

# கந்தையா பாலகிருஷ்ணன்

(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் A.O.)

அவர்களின்

# நினைவு மலர்

10-09-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# கந்தையா பாலகிருஷ்ணன்

(ஓய்வு பெற்ற கட்டிடத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் A.O.)


அவர்களின்

# நினைவு மலர்

**10-09-2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்








எங்கள் நெஞ்சங்களில் பாச
உள்ளங்களில் தெய்வமான உங்கள்
வெள்ளை உள்ளத்தை அன்பு
நெஞ்சத்தை தினம் தினம் எண்ணி நாம்
சுமைதாங்கி ஆகின்றோம். நீங்கள்
விட்டுச்சென்ற நினைவுகளை பாச
உணர்வுகளை நித்தம் நித்தம் நினைந்து
கண்ணீர் வடிக்கின்றோம் உங்கள்
தூய்மையான வாழ்க்கையை உயிர்
உருகும் தியாகத்தை வரலாற்று ஏட்டின்
தூய பக்கங்களில் பொறிப்போம் காலன்
செய்த யாகத்தில் ஆகுதியாகிவிட்ட
உங்கள் பாதச்சுவடுகளில்
இச்சிறு மலரினை எம் கண்ணீருடன்
கலந்து காணிக்கையாக்குகின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



அன்னையின் மடியில்
02-01-1938

ஆண்டவன் அரவணைப்பில்
27-08-2010

அமரர்

# கந்தையா பாலகிருஷ்ணன்

கட்டடத்திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் (A.O)

## திதி வெண்பா

விகிர்தியாம் ஆண்டு ஆவணித்திங்கள் - அமர பக்ஷ
திருதியைத் திதியும் உத்திரட்டாதி நட்சத்திரமும் கூடிய
சுபதினத்தில் நல்லான் பாலகிருஷ்ணன்
இறைவனடி சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# நியம மந்திரங்கள்

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் இவ்வைந்தும் சைவத்திற்கும், சிவ பூசைக்கும், சிவாலய நித்திய நைமித்தியங்களுக்கும், சிவதரிசனத்திற்கும், அடியவர் பூசைக்கும் நியம மந்திரங்களாய் இருக்கும்.

*-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்*
*(நாவலர் அறிவுரை என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)*

## தேவாரம்

**திருச்சிற்றம்பலம்**

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடி கணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

**திருச்சிற்றம்பலம்**

## திருவாசகம்

**திருச்சிற்றம்பலம்**

போற்றி ஓம் நமச்சிவாய புயங்கனே
மயங்குகின்றேன்
போற்றி ஓம் நமச்சிவாய புகலிடம்
பிறிதொன்றில்லை
போற்றி ஓம் நமச்சிவாய புறமெனைப்
போக்கல்கண்டாய்
போற்றி ஓம் நமச்சிவாய சய சய
போற்றி போற்றி

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அங்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே

திருச்சிற்றம்பலம்

## திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்ற தார்பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறஉழறி உமைமண
வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

திருச்சிற்றம்பலம்

## பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

எடுக்குமாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய்
நடக்க மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடி
கடக் கணிற்றைக்கருத்துள் இருத்துவாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் கந்தையா பாலகிருஷ்ணன்
## அவர்களினது வாழ்க்கைச் சுருக்கம்

**தந்தையார்** - கணபதியார் கந்தையா

**தாயார்** - செல்வமணி தம்புகந்தையா

**பிறப்பு** - 02-01-1938

**பெயர்** - பாலகிருஷ்ணன்

**உடன் பிறந்தோர்** - சத்தியபாமா
இராதாகிருஷ்ணன்
மாவல்லி
கிருஷ்ணாதேவி
கிருஷ்ணமனோரஞ்சிதம்

**திருமணம்** - 06-06-1962

அண்ணாமலை தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மகள் அம்பிகாதேவியைத் திருமணம் புரிந்தார்.

**தொழில்** - கட்டிடத் திணைக்களப் பரிசோதகர், கட்டிடத் திணைக்களத் தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டிடத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர்.

**புதல்வர் பேறு**

1. திருமதி புஸ்பலீலா புகேந்திரன்
2. திருமதி கயல்விழி முரளிதரா
3. திரு.கிருஷ்ணகுமார்
4. திரு.திருமாறன்
5. திருமதி ஜெயகலா வைனகுமார்
6. திருமதி கைஷ்மிகலா ஞானேஸ்வரன்

**பேரரைக் கண்டு மகிழ்தல்**

- அகல்யா, அகிலன்
- பவித்ரா
- லிங்கேஸ்வரன், ரெஜினா, மிருஷன்
- ஷ்ீவஷதிகா, சாருகேசன்
- அருட்சனா, குகபாலன்
- கோவர்தனி, அஷேன், டினேஷ்

**சிவபதப்பேறு** - 27-08-2010

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் தோத்திரமாலை

திருச்சிற்றம்பலம்

1. உள்ளமெனும் கூடத்தி லூக்க மெனுந்தறி
நிறுவி உறுதியாகத்
தள்ளாரிய வன்பென்னுந் தொடர்பூட்டியிடைப்படுத்தித்
தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு
கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வருவினைகள் தீர்ப்பாம்

- திருவிளையாடற்புராணம்

2. மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாமெளிதின் முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடிபணிந்து போற்றுவாம்

- கந்தபுராணம்

3. பொற்பதப் பொது வார் புலியூர்புகழ்
சொற்ப தப்பொரு ளாகுவ தூயவ
ரற்ப கற்றொழ வாழணி கோபுரக்
கற்பகத்தனி யானை கழல்களே

- கோயிற்புராணம்

4. திங்களக்குழவி யென்னத்திகழொரு மருப்பிற்சோதி
தங்கு கிம்புரிவயங்கத் தடாமணி மகுடந்தாங்கித்
துங்கநல் வரங்கள் நல்குந் தூய சீரிராமசேதுப்
புங்கவர் வணங்கும் யானை முகத்தனைப் போற்றல்
செய்வாம்.

- சேதுபுராணம்

5. ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா
யிருப்பானை யுரக வேந்தன்
தாங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச்
சயில மானைப்
பாங்குவைத்து மமுந்தானை பரித்தான்றந்
தளித்தானைப் பசும்பொற்றோட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து கரத்தானைப்
போற்றல் செய்வாம்

- சிவராத்திரிபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தனைத் தொழிற்படுக்குமாண்மை தனக்கலாற் பிறர்க்கிலாமை
யனைத்துயிர்த் தொகையுங் காட்சியமைதியிற் கண்டு தேற
முனைத்தகு கூர்வாய்த் தோட்டி முழுவலிப் பாசமைந்தி
வினைத் தொடர்பறுக்குஞ் செங்கை வேழநாயகன்றாள்
போற்றி

- *புலியூர்ப்புராணம்*

7. ஊற்றெ டுத்துவன் டோலிடு மும்மதத்
தாற்றொ ழுக்கி னருவியஞ் சாரல்வா
யேற்று கைக்கு மிறைவற்கு முந்திய
மாற்றி வாக்களி யானையை வாழ்த்துவாம்

- *திருச்செந்தூர்ப்புராணம்*

8. உதய மால்வரை யொண்கதி ரென்னவெ
னிதயதாமரை மீதிலிலங்குவ
மதகடாமழை வாரண மாமுக
முதல்வனைங்கர மூர்த்தி பதாம்புயம்

- *தக்ஷிணகைலாசபுராணம்*

9. வெண்ணிற வுடையினானை
வியாபகப் பொருளானோனை
நுண்ணவிண் மதிமெய் யானை
வாகு நான்குடையான் றன்னை
யொண்ணுத லோடை மின்னு
மும்பன்மா வதனத் தானை
யுண்ணெகிழ்ந் துன்னல் செய்வா
மூறெலா நீங்குமாறே

- *திருக்கேதீச்சரப்புராணம்*

10. சீருற் றிலங்கு முயர்நிமலை
மருங்காய்த் திகழுஞ் சிவனருளால்
மூரிக்குவட்டுக் கடாக்களிற்று
முகத்தோடுதித்து முன்னியவை
நேருற்றுலகி னுயிர்கள் பெறச்
சிந்தை யிரங்கி நெடிதினருள்
கூருற்றமர்ந்த வைங்கரங்கள்
குலவு மமல னடி பணிவுவாம்

- *நகுலகிரிப்புராணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பவளமால் வரையி னில்வெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடனின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்
*- திருவாதவூரடிகள் புராணம்*

12. திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்
*- விருத்தாசலபுராணம்*

13. மாற்றியரிய தொல்பிறவி மறிகடலின்
இடைப்பட்டுப்
போற்றுறு தன்குரை கழற்றாள்
புணைபற்றிக் கிடந்தோரைச்
சாற்றரிய தனி முத்தித்
தடங்கரையின் மிசை உய்ப்பக்
காற்றெறியும் தழைசெவிய
கடக்களிற்றை வணங்குவாம்
*- காசிகாண்டம்*

14. அகரமென வறிவாகி யுலகமெங்கு
மமர்ந்தகர வுகர மகரங்கடம்மாற்
பகரு மொருமுதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருணான் கினையு மிடர் தீர்த்தெய்தல்
போற்று நருக்கறக்கருணை புரிந்தல் வார்க்கு
நிகரின் மறக்கருணை புரிந்தாண்டு கொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்
*- விநாயகபுராணம்*

15. வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகரம் மூன்று விழி நால்வாய்
யானை முகனைப் பரவியஞ்சலி செய்கிற்பாம்
*- சேக்கிழார்புராணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

ஆதியில் இக் கவசத்தைக் காசிப முனிவர் முற்கல முனிவருக்கு அருளிச்செய்ய, அவர் மாண்டருளிய முனிவருக்கு அநுக்கிரகிக்க, அவர் மாரீச முனிவருக்கு உபதேசித்தருள அவர் பல முனிவருக்குத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தனரென்றறிக.

நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்து கொண்டு ஒன்றுபட்ட மனத்துடனே விநாயகரைத் தியானித்து, இதைச் செபிக்க வேண்டும்.

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடாவதிகசவுந் தரதேக
மகோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவம் தம்மைத்
தளர்வில் மகோதரர் காக்க தடவிழிகள்
பால சந்திரனார் காக்க. 1

கவின் வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில் சிபுகம் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க. 2

காமரு பூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்க களங்கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க வகட்
டினைத் துலங்கே ரம்பர் காக்க. 3

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்குய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க சகனத்தை யல்லல்
உக்கண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க விரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச் செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க. 5

அக்கினியில் சித்தீசர் காக்க உமா
புத்திரர் தென் திசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க. 6

ஏகதந்தர் பகல் முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஒகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதாபூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி உயிர்த் திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குடிபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க. 7

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலவண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. 8

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்
ஓதிடின் நும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும். 9

**விநாயகர் கவசம் முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் தேவராயன் அருளிய

# கந்தசஷ்டி கவசம்



காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்கப்
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயி ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னம் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள்ள எந்தனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ காயத்ரி மந்த்ரம்

ஓம் / பூர்புவஸ்ஸு : / தத் ஸவிதுர் வரேண்யம் /
பர்கோ தேவஸ்ய தீமஹி / தியோ யோ நஃபரசோதயாத் //

## ஸ்ரீ ஸத்ய ஸாயி காயத்ரி மந்த்ரம்

ஸாயீச்வராய வித்மஹே ஸத்ய தேவாய தீமஹி /
தன்னச்சர்வ ப்ரசோதயாத் //
ஸாயி ராமாய வித்மஹே ஆத்மா ராமாய தீமஹி /
தந்தோ பாபா ப்ரசோதயாத் //

## பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா
## அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ பகவான் ஸ்தய ஸாயி பாபாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய ஸ்வரூபாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய தர்ம பராயணாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி வரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸத் புரஷாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸத்ய குணாதமனே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது வரத்தனாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது ஜன போஷயாண நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வக்ஞாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஜன ப்ரியாய நம : 10
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ சக்தி மூர்த்தி நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வேசாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஸங்க பரித்யாகினே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாந்தர்யாமினே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி மஹிமாத்மனே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி மஹேச்வர ஸ்வரூபாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி பர்த்தி க்ஷேத்ர நிவாஸினே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி யசஹ்காய சிர்டி வாஸினே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஜோடி ஆதிபள்ளி ஸோமப்பாய நம : 20
ஓம் ஸ்ரீ ஸாயி பாரத்வாஜ ரிஷி கோத்ராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த வத்ஸலாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த வத்ஸலாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அபாந்தராத்மனே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பய நிவாரிணே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆஸ்பதம்ப ஸூத்ராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அபய ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ரத்னாகர வம்சோத்பவாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி சிர்டி ஸாயி அபேத சக்தயாவதாராய நம :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ஸாயி சங்கராய நம : 30
ஓம் ஸ்ரீ ஸாயி சீரடி ஸாயி மூர்த்தயே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி த்வாரகாமாயி வாஸினே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி சித்ராவதீ தட புட்டபர்த்தி விஹாரிணே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி சக்தி ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி சரணாகத த்ராணாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆனந்தாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆனந்த தாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆர்த்த த்ராண பராயணாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அனாத நாதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அஸஹாய ஸஹாயாய நம : 40
ஓம் ஸ்ரீ ஸாயி லோக பாந்தவாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி லோக ரக்ஷா பராணயாண நம :
ஓம் ஸ்ரீ ஸாயி லோக நாதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி தீன ஜன போஷணாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி மூர்த்தி த்ரய ஸ்வரூபாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி முக்தி ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி கலுஷ விதூராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி கருணாகராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாதாரய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஹ்ருத் வாஸினே நம : 50
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ புண்ய பல ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பாய க்ஷயகராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ரோக நிவாரிணே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ பாத ஹராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அனந்தநுத கர்த்ருணே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆதி புரஷாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆதி சக்தயே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அபரூப சக்தினே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அவ்யக்த ரூபிணே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அனந்தநுத கர்த்ருணே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி காமக்ரோத த்வம்ஸினே நம : 60
ஓம் ஸ்ரீ ஸாயி கனகாம்பர தாரிணே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அத்புத சர்யாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆபத் பாந்தவாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேமாத்மனே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேம மூர்த்தயே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரேம ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ப்ரியாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ப்ரியாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த மந்தாராய நம :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ஜன ஹ்ரதய விஹாராய நம : 70
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த ஜன ஹ்ருதயாலயாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி பக்த பராதீனாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி பக்தி ஞான ப்ரதீபாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி பக்தி ஞான ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸுக்ஞான மார்க தர்சகாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஞான ஸ்வரூபாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி கீதா போதகாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஞான ஸித்திதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸுந்தர ரூபாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி புண்ய புருஷாய நம : 80
ஓம் ஸ்ரீ ஸாயி பல ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி புருஷோத்தமாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அதீதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி காலா தீதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸித்தி ரூபாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆரோக்ய ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி அன்ன வஸ்தர தாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸம்ஸார துஹ்க க்ஷயகராய நம : 90
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வாபீஷ்ட ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி கல்யாண குணாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி கர்ம த்வம்ஸினே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது மானஸ சோபிதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ மத ஸம்மதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாது மானஸ் பரிசோதகாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸாதகானுக்ரஹ
வட வ்ருக்ஷ ப்ரதிஷ்டாபகாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸகல ஸம்சய ஹராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸகல தத்வ போதகாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி யோகீச்வராய நம : 100
ஓம் ஸ்ரீ ஸாயி யோகீந்த்ர வந்திதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸ்ர்வ மங்கள கராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸர்வ ஸித்தி ப்ரதாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆபந் நிவாரிணே நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஆர்த்தி ஹராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி சாந்த ஹராய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி ஸலப ப்ரஸன்னாய நம :
ஓம் ஸ்ரீ ஸாயி பகவான் ஸ்ரீ சத்ய ஸாயி பாபாய நம : 108

ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில மருத்துவக் குறிப்புக்கள்

### காது

**காதிலிருந்து சீழ் வடிதலினால் ஏற்படும் பாதிப்புக்கள்.**

1. கேட்டல் குறைபாடு.
2. முகநரம்பு பாதிப்படைதல்.
3. மூளை மென்சவ்வு, மூளைய அழற்சி.
4. மூளையில் சீழ் கட்டி ஏற்படல்.
5. மூளைய நாளங்களில் குருதி கட்டிபடல்.
6. செவிப்பறை மென்சவ்வில் துவாரம் ஏற்படல்
7. கழுத்து, காதின் பிற்பகுதி ஆகிய இடங்களில் சீழ்கட்டி ஏற்படல்

**காது நோ/ வலிக்கான காரணங்கள்**

1. காதுச்சோணை, வெளிக்காதுக்கால்வாய், செவிப்பறை மென்சவ்வு, நடுக்காது ஆகிய பகுதிகளில் ஏற்படும் அழற்சி.
2. Hard wax - கடினமான காது மெழுகு/ குடும்பி
3. கீழ்த்தாடையென்பு மூட்டில் ஏற்படும் பிரச்சினை.
4. பற்சூத்தை
5. (Tonsil) ரொன்சிலில் ஏற்படும் அழற்சி
6. Tonsil, வாய், நாக்கு, தொண்டை ஆகிய பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய்.

**கேட்டல் குறைபாடு**

1. இது பரம்பரையாகவோ அல்லது இடையிட்டோ ஏற்படலாம்.
2. குழந்தைகள், சிறுபிள்ளைகளில் ஏற்படும் கேட்டல் குறைபாடுகளுக்கு **உரிய முறையில் உரிய நேரத்தில்** சிகிச்சை அளிப்பதன் மூலம் அவர்கள் நிரந்தர கேட்டற்குறைபாடு உள்ள நிலையை அடைவ தைத் தவிர்க்க முடியும்.
3. சிலவகையான கேட்டற்குறைபாடுகளை சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.
4. வயது முதிர்ந்தவர்களிடம் ஏற்படும் கேட்டற்குறைபாட்டினை Hearing aids எனப்படும் கேட்டற்திறனினை அதிகரிக்கும் உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நிவர்த்திக்க முடியும்.

**செவிப்புலனைப் பாதுகாப்போம்**

1. தொடர்ச்சியாகக் கூடுதலான நேரம் ear phone பாவிப்பதனைத் தவிர்த்தல்.
2. சத்தமான இடங்களில் வேலை செய்பவர்கள் (உ-ம் : இயந்திரச் சத்தம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயமாக ear depender - காதிற்கான பாதுகாப்பு உபகரணத்தை அணிய வேண்டும்.

3. இடி, மின்னல் நேரங்களில் தொலைபேசி பாவிப்பதனைத் தவிர்த்தல்.
4. Cotton bud/ ear bud இனைப் பாவிப்பதைத் தவிர்த்தல்.
5. காதினுள் பேனா, பேனா மூடி, Hair clip போன்றவற்றைப் பயன்படுத்திக் குடைவதனைத் தவிர்த்தல்.
6. செவிப்பறை மென்சவ்வில் துவாரம் இருப்பின் அதனைச் சத்திர சிகிச்சை மூலம் அடைக்க முடியும்.
7. காதிலிருந்து தொடர்ச்சியாக 3 மாதங்களிற்கு மேல் நாற்றத்துடன் சிறிய அளவில் சீழ் வடிதல். choleasteatoma கொலஸ்ரற்றோமா எனப்படும் பாரதூரமான நோயின் அறிகுறியாக இருக்கலாம். இதனை (Mastoid operation) மஸ்ரொயிட் சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

## மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்

### முதலுதவி

மூக்கின் முற்புற கீழ்ப்பகுதியில் இருபுறமும் விரல்களினால் அழுத்திப் பிடித்து, தலையை முன்நோக்கிச் சாய்த்தவாறு வாயினால் சுவாசித்தல். இப்படி 10 நிமிடம் இருத்தல் வேண்டும். அத்துடன் Ice cubes - ஐஸ் கட்டியினை நெற்றிக்கும் மூக்கிற்கும் இடையில் வைத்தல்.

10 நிமிடத்தின் பின்பும் மூக்கிலிருந்து குருதி வடிந்தால் வைத்திய உதவியை நாடவும்.

### காரணங்கள்

1. Trauma - காயம் காரணமாக
2. சத்திர சிகிச்சையின் பின்பு
3. Angioiobroma எனப்படும் கட்டி. இது குறிப்பாக ஆண் சிறுவர் களிடம் மட்டும் ஏற்படுகிறது.
4. மூக்கு, நாசிக்குடா ஆகியவற்றில் ஏற்படும் புற்றுநோய்.
5. குருதியை உறையச் செய்யும் காரணிகள், குருதிச்சிறுதட்டுக்கள் ஆகியவற்றில் பற்றாக்குறையை ஏற்படுத்தும் காரணிகள்

**குறிப்பு:**

ஒருவருக்கு 2 கிழமைகளின் மேல் குரல் மாறியிருந்தால் இது குரல் நாணில் ஏற்படும் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறியாகக்கூட இருக்கலாம். எனவே காது, மூக்கு, தொண்டை சம்பந்தமான சத்திரசிகிச்சை நிபுணரிடம் ஆலோசனை பெறப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிதாகும்"

## செய்ந்நன்றி கொண்டவர்க்கு
## நெஞ்சம் நெகிழ்ந்த
## நன்றிகள் பல...

**கந்தையா பாலகிருஷ்ணன் அவர்களின்
மறைவின்போது வந்து கலந்துகொண்டோர்க்கும்
இறுதிக் கிரியைகளில் கலந்து
சேவையாற்றியோர்க்கும்
அனுதாபச் செய்தி அனுப்பியோர்க்கும்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியங்களில்
கலந்துகொண்டு ஆன்மசாந்திக்காகப்
பிரார்த்தித்தவர்களுக்கும்
நினைவு மலரை ஆக்கியவர்களுக்கும்
மலரை அழகுற அச்சிட்டுதவிய
யாழ்ப்பாணம், தீபம் பிறின்டேர்ஸ்
நிறுவனத்தினர்க்கும்
எம்மினிய நன்றிகள்
உரித்தாகுக.**



அன்புசால்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

*ஆறுமுகம் → *கணபதியார் → *கந்தையா + *செல்வமணி

*தம்பு → *கந்தையா + *பொன்னம்மா → *கந்தையா + *செல்வமணி

*கந்தையா + *செல்வமணி:
- **பாலகிருஷ்ணன்**
- *சத்தியபாமா + நவரத்தினம்
- இராதாகிருஷ்ணன் + பேராம்பிகை
- மாவல்லி + *இராஜபூபாலசிங்கம்
- கிருஷ்ணாதேவி + பரமகுலசிங்கம்
- கிருஸ்ணமனோரஞ்சிதம் + கதிர்காமநாதன்

*அண்ணாமலை + *தெய்வானைப்பிள்ளை:
- *கனகம்மா + *நரசிங்கம்
- *விஜயதேவி + *சிவகணேசமூர்த்தி
- *கந்தையா + *புவனேஸ்வரியம்மா
- *சத்தியபாமா + நவரத்தினம்
- அம்பிகாதேவி

பாலகிருஷ்ணன் + அம்பிகாதேவி:
- புஸ்பலீலா + புகேந்திரன்
  - அகிலன்
  - அகல்யா
- கயல்விழி + முரளிதரா
  - பவித்ரா
- கிருஷ்ணகுமார் + கோமளா
  - லிங்கேஷ்வரன்
  - ரெஜினா
  - மிருஷன்
- திருமாறன் + ஸ்ரீஜீவராணி
  - ஷ்வஷ்திகா
  - சாருகேசன்
- ஜெயகலா + லவனகுமார்
  - அருட்சனா
  - குகபாலன்
- லக்ஷ்மிகலா + ஞானேஸ்வரன்
  - கோவர்தனி
  - அஷேன்
  - டினேஷ்

* அமரத்துவம் அடைந்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org